# பொதுக்காலம் 32ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பிரியமானவர்களே, இன்று பொதுக்காலம் 32ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

உயிர்த்தெழுதலை ஏற்க மறுக்கும் சதுசேயர்கள், இயேசுவை சோதிக்கும் நோக்கத்துடன், ஏழு பேருக்கு மனைவியாக இருந்து, இறந்தபின் யாருக்கு மனைவியாக இருப்பாள் எனக் கேட்ட குறுக்கு கேள்விக்கு, "விண்ணகத்தில் பெண் கொடுப்பதுமில்லை, எடுப்பதுமில்லை, அவர்கள் வானதூதர் போல் இருப்பார்கள்" என இயேசு கூறுகின்றார். "ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்" என்று தெளிவுபடுத்தும் இயேசு, "நம் கடவுள் இறந்தோரின் கடவுள் அல்ல, மாறாக அவர் வாழ்வோரின் கடவுள்" என உறுதிப்படுத்துகினறார். இந்த விசுவாசத்தின் அடிப்படையில்தான், அந்த யூதத் தாயும், அவரது ஏழு மகன்களும் பன்றி இறைச்சியை உண்ண மறுத்து, மறைசாட்சியாய் உயிர் துறக்கின்றனர். "இறந்தபின் என்றென்றும் வாழும் அனைத்துலக அரசர் எங்களை உயிர்த்தெழச் செய்வார்" என்று கூறியே உயிர் துறக்கின்றனர் என்பதை இன்றைய முதல் வாசகத்தின் வழியாக நாம் அறியலாம்.

"நல்லன செய்வோர், வாழ்வு பெற உயிர்த்தெழுவர், தீயன செய்வோர் தண்டனைத் தீர்ப்பு பெற உயிர்த்தெழுவர்" என்ற இறைவார்த்தைக்கேற்ப, உலக முடிவு நாளில் நாம் அனைவரும் இறைவனின் திருமுன் ஒன்று கூட்டப்பட்டு, சின்னஞ்சிறியவர்க்கு உதவி செய்தவர்கள் எல்லாரும் இறைவனின் வலப்புறம் ஆசி பெற்ற மக்களாகவும், மாறாக சின்னஞ்சிறியவர்க்கு உதவி செய்யாதவர்கள் இறைவனின் இடப்புறம் சபிக்கப்பட்டவர்களாக நிற்போம் என்பதை மத்தேயு நற்செய்தியிலும், அதேபோல், லூக்கா நற்செய்தியில், "செல்வரும், இலாசரும்" உவமையில், இருவரும் இறந்தபின் செல்வந்தன் எரிநரகத்திற்கும். இலாசர் ஆபிரகாமின் மடியிலும் இருப்பதையும் வாசிக்கின்ற நாம், நிச்சயம் உயிர்த்தெழுதல் உண்டு என்பதை மறுக்க இயலாது. "இறந்தோர் உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால், கிறிஸ்துவும் உயிருடன் எழுப்பபடவில்லை என்றாகிவிடும். அப்படியென்றால் நாங்களும் பொய்ச்சான்று பகர்பவர்களாகி விடுவோம், நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாகி விடும்" என பவுல் கூறுகின்றார்.

நம் மூதாதையர்கள், வாக்களிப்பட்ட நாட்டைப் பெறவில்லையென்ற போதும், அவர்கள் அனைவரும் எதிர்நோக்கி இருந்தது அதைவிட மேலான விண்ணக நாட்டையே. விண்ணகத்திலிருந்தே கடவுள் வருவார் எனக் காத்திருக்கும் நாம்,

இவ்வுலகில் தற்காலிகக் குடிகள் என்பதை உணர்ந்தவர்களாக, விண்ணக வாழ்வை கண்முன் கொண்டவர்களாக, இறைவனின் வலப்புறம் அமரும் ஆசீர் பெற்ற மாந்தர்களாக இடம்பெற, நற்செயல்கள் செய்து, மாண்புக்குரியவர்களாய் உயிர்த்தெழ வரம் வேண்டி, இத்தெய்வீகத் திருப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. "கடவுளை நம்புவோர்க்கு இழப்பு என்பது இல்லை" என்ற இறைவா,

எங்கள் வாழ்வில் வரும் துன்பங்கள், வேதனைகள், எதிர்ப்புக்கள், நெருக்கடிகள், அவமானங்கள் போன்ற தருணங்களில், எங்களது விசுவாச வாழ்விலே தளர்ந்து, சோர்ந்து போய்விடுகின்றோம். உம்மைப் பழித்துரைக்கின்றோம்; நம்பிக்கையில் தளர்ந்து விடுகின்றோம். உண்மை இறைவனாகிய உம்மை விட்டுவிலகி நிற்கின்றோம். இத்ததைய மனநிலையை மாற்றி, உம்மை நம்பும் எவருக்கும் எந்த நன்மையும் குறைபடாது, இழப்பு என்பதிருக்காது, என்பதை வாழ்வில் உறுதியாய் உணர்ந்து, உம்மையே நாடுகின்ற, தேடுகின்ற மக்களாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

2. "கடவுள் இறந்தோரின் கடவுள் அல்ல, மாறாக, அவர் வாழ்வோரின் கடவுள்" என்ற இறைவா,

எங்கள் குடும்பங்களில், உறவினர்களில், பங்குத்தளத்தில் மரித்த அனைத்து ஆன்மாக்களையும் மற்றும் யாரும் நினையாத அனைத்து ஆன்மாக்களையும் நீரே உம் விண்ணகத் திருச்சமூகத்தில் ஏற்றுக் கொள்ளும். அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் செய்த பாவங்களை குற்றங்களை உமது பேரன்பினால், இரக்கத்தினால் மன்னித்து, அவர்களை வான்வீட்டில் சேர்த்து, உம் தூதர்களோடு உம்மை துதித்து, புகழ்ந்து பாடிடும், அந்த உன்னத பேற்றினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. "மேன்மை அடைய தாழ்மையே வழி" என்ற இறைவா,

தன்னையே தாழ்த்தி, இவ்வுலகில் மனிதனாக வாழ்ந்து, தாழ்ச்சிக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினீரே, ஆனால், நாங்கள், எங்கள் குடும்பத்தில், பணித்தளங்களில் அந்தத் தாழ்ச்சியைப் பின்பற்றாது, பல நேரங்களில் "நான்" என்ற ஆணவத்துடன், யாரையும் மதிக்காது, மேட்டிமையான மனநிலையுடன், உயர்வு மனப்பான்மையுடன் பிறரை தாழ்வாகக் கருதி, ஏளனத்துடன் நடத்தி, மட்டம் தட்டி, செருக்குடன், பரிசேய மனநிலையில் வாழ்ந்து வருகிறோம். இந்த இழிவான

மனநிலையைக் களைந்து, எங்கள் ஆணவப் போக்கினை மாற்றி, தாழ்ச்சியுடன் நடந்து, உம் வழியினை உறுதியுடன் பின்பற்றிட, வலிமையான மனதினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

4. "பெறுவதற்காக மட்டும் கைகளை விரித்திராதே. கொடுக்கும் நேரத்திலோ உன் கைகளை மூடிக் கொள்ளாதே" என்ற இறைவா,

ஏழ்மை, வறுமை நிலையில் துயருறும் மாந்தர்களைக் கண்டும் காணாதது போல செல்லாமல், எங்கள் வாழ்வின் வளமையை மட்டுமே முன்னிருத்தி, எங்கள் தலைமுறைக்கே சொத்து சேர்த்து வைக்கும் தன்னல மனநிலையகற்றி, தன்னிடமுள்ள இரண்டு மீன்களைக் கொடுத்து உதவிய அந்தச் சிறுவனின் பரந்த, பிறர்நல மனதினைப் பெற்று, எங்களிடமுள்ளதை பிறருக்கு கொடுத்து, பகிர்ந்து வாழ்ந்திடவும், கொடுப்பதை முகமலர்ச்சியுடன் கொடுத்திடவும் கூடிய தாராள மனதினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

5. "நோயாளிகளைச் சந்திக்க தயங்காதே" என்ற இறைவா,

பல்வேறு நோய்களினால், துன்புறும் நோயாளிகளை உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். நோயினால் துயருறுவதை விட, தன்னை கவனிக்க ஆளில்லாமல், அன்புடன், கனிவுடன், ஆறுதல் வார்த்தைகள் சொல்ல யாருமில்லாமல், மனதளவில் பாதிக்கப்பட்டு வருந்துவோரே அதிகம் என்பதை உணர்ந்து, எங்கள் வாழ்வில் கிடைக்கும் சில ஓய்வு நேரங்களை, வீண்வெட்டி பேச்சிலும், தொலைக்காட்சியிலும் எங்கள் வாழ்வை தொலைத்துவிடாது, இத்தகைய மாந்தர்களை தேடிச் சென்று, அவர்களுக்கு உதவிடவும், எங்கள் உடனிருப்பின் வழியாக அவர்கள் தங்கள் உள்ளத்தில் மகிழ்வினைப் பெற்றுக் கொள்ளவும், எங்கள் செபங்கள் வழியாக அவர்கள் விரைவில் குணம் அடையவும், நீர் உம் இரக்கத்தைப் பொழிந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com